# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் - 05.10.2026**

**முன்னிலை**

**திரு வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA-15889-G-2025**

திரு. சிவகுமார்.வெ .. மனுதாரர்

/எதிர்/

1.பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
இராணிப்பேட்டை.
இராணிப்பேட்டை மாவட்டம்- 632401.

2.பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
உதவி இயக்குநர் (வரைவு),
மத்திய நில அளவை அலுவலகம்,
நிலஅளவை (ம) நிலவரித்திட்ட இயக்ககம்,
சேப்பாக்கம்,
சென்னை -600 005

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 30.06.2025 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 27.07.2025 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 15.07.2025 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 31.07.2025 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 04.08.2025 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 27.10.2025 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (05.10.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு. சிவகுமார்.வெ என்பவர் ஆஜராகவில்லை. மேலும், மனுதாரர் தனக்கு சோளிங்கர் மாவட்ட முன்சீப் நீதிமன்ற வழக்கு விசாரணை உள்ள காரணத்தினால் இன்றைய விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என 28.09.2026 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் வாயிலாக தெரிவித்துள்ளார். ஆணையம் அதனை பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி வி.பாக்கியலட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் வளாகம், இராணிப்பேட்டை இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் (மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பேரிடர் மேலாண்மை தொடர்பான ஆய்வுகூட்டம்

உள்ளதால்) ஆஜராகவில்லை. அவர் சார்பாக திருமதி த.தனலட்சுமி தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம், திருமதி P.பிரபாவதி தொழில் நுட்ப மேலாளர், மத்திய நில அளவை அலுவலகம், நிலஅளவை (ம) நிலவரித்திட்ட இயக்ககம், சேப்பாக்கம்,சென்னை மற்றும் திரு.பா.பழனிவேல் வட்டசார் ஆய்வாளர், நெமிலி வட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், இராணிப்பேட்டை மாவட்டம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),லக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், நெமிலி வட்டம் காவேரிப்பாக்கம் குறுவட்டம், ஓச்சேரி வருவாய் கிராமத்தின் சம்பந்தமாக அனைத்து சர்வே எண்களுக்கு உட்பட்ட UDR முந்தைய ஆவணத்தின் பெயர் 1)நில மேம்பாட்டுத்திட்டப்பணிக்கு முன்புள்ள பழைய நில அளவு புலப்படச்சுவடிகள், 2) பழைய செட்டில்மெண்ட் பதிவேடு (Old Settlement Register OSR) 3.அச்சிடப்பட்ட மறு நிலவரித்திட்ட செட்டில்மெண்ட் அ பதிவேடுகள்(RSR) உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 6 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (05.10.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.அ1/2143/2026 நாள் 30.09.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்க தயாராக இருப்பதாக தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரிய தகவலுக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் முழுமையான தகவல்களாக இல்லை என இவ்வாணையம் கருதுகிறது. மேலும் இன்றைய தின விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை என்பதால், பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- ***மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து, சம்மந்தப்பட்ட அலுவலக பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணைக் கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள், மனுதாரருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம், மனுதாரரை அலுவலகத்திற்கு வரவழைத்து, அவரது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களை, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, மனுதாரர் பார்வை செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, மனுதாரர் பார்வை செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, உரிய சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, அவற்றை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் பார்வை செய்த வீடியோ அல்லது புகைப்படம் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 02.11.2026 அன்று நேரில் ஆஜராகி***

*சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையத்தின் வாயிலாக உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA-15889-G-2025**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு:-**
1.பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
இராணிப்பேட்டை,
இராணிப்பேட்டை மாவட்டம்- 632401.

2.பொதுத் தகவல் அலுவலர்/
உதவி இயக்குநர் (வரைவு),
மத்திய நில அளவை அலுவலகம்,
நிலஅளவை (ம) நிலவரித்திட்ட இயக்ககம்,
சேப்பாக்கம்,
சென்னை -600 005

வட்டசார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
நெமிலி வட்டம்
இராணிப்பேட்டை மாவட்டம்.

**மனுதாரர் SA-15889-G-2025**
திரு. சிவகுமார்.வெ
எண்.30,தேவராஜன் தெரு,
ஸ்ரீரங்க கிருஷ்ணா நகர்,
காஞ்சிபுரம் - 631501
Phone : 9245500969

Copy to: File
VPS /PA-08.10.2026